***கவனிக்க.***-*2022.07.29 ஆந் திகதிய 2291 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி* II *மற்றும் பகுதி* IV*(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2292 - 2022 අගෝස්තු මස 05 වැනි සිකුරාදා - 2022.08.05

*2292 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | *1218* | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1228* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1231* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1219* | ஏல விற்பனைகள் | *1234* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1220* | நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.***- (i) இலங்கை தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மோசடிகளைத் தடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஓகத்து மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1217 - B 082369 - 5,403 (2022/08)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## காணி அமைச்சு
## இலங்கை நில அளவைத் திணைக்களம்

### விலைமனுக் கோரல்

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022***

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக் கோரல்கள் 2022.08.22ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்விமனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *தேவைப்படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பலாங்கொடை | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | பலாங்கொடை நகரைச் சுற்றி | 2022.10.03 |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.**- *அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக் கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இடவசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2,300 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2022.08.22ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*ஏ. திசாநாயக்க,*
*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 05.*
*2022.08.01.*

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2022**

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் - 2022

**கட்டிட உரிமையாளருக்காக :**

01. முழுப்பெயர் :----------------------------------------------------------------------------------------------------.

02. முகவரி :----------------------------------------------------------------------------------------------------.

03. தொலைபேசி இலக்கம் :------------------------------------------------------------------------------------.

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----------------------------------------------------------------------.

**கட்டிடம் தொடர்பாக :**

01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது ? :--------------------------
----------------------------------------------------------------------------------------------------.

02. மாதாந்த வாடகைத் தொகை :----------------------------------------------.

03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி :--------------------------------------------------------------------------.

04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ. :-----------------------------------;

05. இடத்தின் விஸ்தீரணம் :------------------------------------------------------------------------------------

06. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :------------------------

07. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-------------------------------------------------.

08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா ? :-----------------------------------------------.

09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில்/கம்பி /வேலி) :---------------------------------------------------.

10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை ? :----------------------------------------------------------.

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

---------
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

08-66

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம்- மட்டக்களப்பு**
**பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2022.08.27 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்துக்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டு அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏலவிற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ. பீற்றர் போல்,
நீதிவான் .

நீதிவான் நீதிமன்றம் ,
மட்டக்களப்பு,
2022.07.21.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப் பொருட்களின் விபரம்**

| தொ.இல. | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப்பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 65173/EX/2022 | EP BAN - 7037 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2. | 63917/EX/2021 | NW-XE -7493 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | 65145/F/2022 | | வாவித்தோணி | 01 |
| 4. | 62752/PC/2021 | | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 5. | AR/40/2020 | | கையடக்கத் தொலைபேசி | 01 |
| 6. | 65894/S/2022 | | சவள் | 01 |
| 7. | 65406/S/2022 | | அலவாங்கு | 01 |
| 8. | 65406/S/2022 | | மண்வெட்டி | 01 |
| | | | பிக்காஸ் | 01 |
| 9. | 65691/S/2022 | | சவள் | 01 |
| 10. | 65692/S/2022 | | சவள் | 01 |
| 11. | 65690/S/2022 | | சவள் | 01 |
| 12. | 59579/S/2020 | | சவள் | 01 |
| 13. | 65749/S/2022 | | சவள் | 05 |
| 14. | | | ஆற்றுமணல் | 09 |
| 15. | | | ஊத்தமண் | 16 |
| 16. | 63384/S/2021 | | தாச்சி | 01 |
| 17. | No Number | | பானை | 01 |
| | | | தாச்சி | 01 |

08-09

## ஆய விற்பனையும் குத்தகையும்

### 2023 ஆம் ஆண்டிற்கான மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை

2023, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்திற்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படும் கள்ளுத்தவறணைகளில் நொதித்த கள்ளு சில்லறைக்கு விற்பனை செய்வதற்கு முழுமையான சலுகைகளுடன் வாங்குவதற்காக 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 207 ஐக் கொண்ட வர்த்தமானியில் சுங்கவரி ஆணையாளரினால் பிரசுரிக்கப்பட்ட கள்ளு விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு உட்பட்டு 2022.09.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரையில் மல்லவபிட்டிய பிரதேச செயலாளரினால் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத்தவறணையை வாடகைக்கு வாங்குவதற்கு முன்வருபவர்கள் குறித்த விலைமனு மாதிரிப் படிவத்தை உரியவாறு பூர்த்தி செய்து கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கு குறித்துரைக்கப்பட்ட விலைமனு வைப்புத் தொகையைச் செலுத்தி ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் காசாளர் கிளையில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், மேலே காட்டப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் கள்ளு விற்பனை நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெற்றுக் கொண்ட பெறுமதி சான்றிதழுடன் உறையில் இட்டு அதற்கு முத்திரை இட்டு,அவ்வுறையில் இடது மூலையில் தான் விலைமனு கோருகின்ற கள்ளுத் தவறணையின் பெயர் மற்றும் இலக்கத்தைத் தெளிவாக எழுதி உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது இப் பிரதேச செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலம் மல்லவபிட்டிய பிரதேச செயலாளருக்கு கிடைக்குமாறு செய்ய முடியும். குறித்த மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

3. விலைமனுதாரர்களினால் விலைமனுப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும்போது விலைமனுப் பத்திரத்திரங்களில் செய்யப்படுகின்ற

அனைத்து மாற்றங்களுக்கும் விலைமனுதாரரின் முழுமையான கையொப்பத்தையிட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

4.விலைமனு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதியான 2022, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இப் பிரதேச செயலகத்திற்கு வருகை தர வேண்டும்.

5.எவ்வித காரணங்களும் அறிவிக்காமல் விலைமனுப் பத்திரங்கள் அல்லது விலைமனு பத்திரம் அனைத்தையும் நிராகரிக்கும் உரிமை மல்லவபிட்டிய பிரதேச செயலாளருக்கு உரித்தானதாகும்.

6. தனிச்சலுகையுடன் வாங்கிய நபர் என்று அறிக்கைப்படுத்திய பின் வெற்றிகரமான விலைமனுதாரர்களினால் அவ்வாறு அறிவிக்கப்படும் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதேச செயலாளரினால் குறிப்பிடப்படும் தொகையினை பாதுகாப்பு பிணையினை செலுத்தி விற்பனை நிபந்தனைகளுக்கு கையொப்பமிட வேண்டும்.

7.கள்ளுத்தவறணைகளை கொண்டு நடாத்துவதற்காக விலைமனுதாரர்களினால் பொதுமக்களின் எதிர்ப்பு ஏற்படாத தகுந்த இடம் ஒன்றினை தேர்ந்தெடுத்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் உடற்தகுதி சம்பந்தமாக விலைமனு வழங்கப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வெற்றிகரமான விலைமனுதாரரினால் அதுபற்றி பிரதேச செயலாளரின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. 2022, செத்தெம்பர் 12 ஆந் திகதி கள்ளு விற்பனையில் திருப்திகரமான கோரிக்கை இல்லாவிட்டால் 2022.10.12 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு மீண்டும் கள்ளு விற்பனை இவ்விடத்தில் கொண்டு நடாத்தப்படும்.

9. மேலதிக தகவல் தேவைப்படின் இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

என்.ஏ.ஏ.எஸ். பிரியங்கர,
பிரதேச செயலாளர்,
மல்லவபிட்டிய.

2022, யூலை 04 .

**அட்டவணை**

**மல்லவபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணைக்கான அனுமதி- 2023**

| பெயர் மற்றும் இலக்கம் | பத்துவ | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய பிரதேசம் | விலைமனு வைப்புப் பணம் | விலைமனு மூடப்படும் திகதி மற்றும் நேரம் | கள்ளுத் தவறணை திறக்க வேண்டிய நேரம் | கள்ளுத் தவறணை மூடப்பட வேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|---|
| கடுபிட்டிய இலக்கம் 01 | வேவுட வில்லி ஹத்பத்துவ | கடுபிட்டிய | ரூபா 1000 | 2022.09.12 மு.ப.10.30 | மு.ப.11.00 மற்றும் பி.ப.5.00 | பி.ப.2.00 மற்றும் பி.ப.8.00 |

8-01

---

## இரத்தினபுரி மாவட்டத்தில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2023

பின்னவலை 2 ஆம் இலக்கக் கள்ளுத்தவறணை

2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள கால எல்லைக்குள் கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவை கீழுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்–

(i) 1982.08.20 ஆந் திகதியுடைய 207 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனையின் படியும்,

(ii) மதுவரிச் சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான விற்பனை உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவும்.

*2. எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியில் அல்லது மாவட்டச் செயலகத்தில் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். பின்னவலை இல. 02 கள்ளுத்தவறணைக்காக 1,500.00 ரூபாவைக் கொண்ட தொகை செலுத்தப்பட வேண்டும்.*

*3. இலங்கையில் உள்ள எல்லா பிரதேச செயலகங்களிலும் கொழும்பு மதுபான ஆணையாளர் அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் எழுதப்பட்ட விலைமனு உறையை ஒட்டி முத்திரையிட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "பின்னவலை இல. 2 கள்ளுத் தவறணைக்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கள்ளுத் தவறணை மூடுவதற்கான காலம் முடிவடையும் முன் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், இம்புல்பே" எனும் விலாசத்திற்கு அனுப்பவும் அல்லது இம்புல்பே பிரதேச செயலகத்தில் உள்ள விலைமனுப் பெட்டியில் போடவும்.*

*4. எல்லா விலைமனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலைமனு சமர்ப்பிக்க வேண்டும்.*

*5. ஒருவருக்கு ஒரு கள்ளுத்தவறணைக்கு மேலாக விலைமனு கோரப்பட முடியாது. ஒரு கள்ளுத்தவறணைக்காக 5 பேருக்கும் மேலாக விண்ணப்பம் கோர முடியாது.*

*6. விலைமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் இலக்கத்திலும் எழுத்திலும் இருத்தல் வேண்டும். விலைமனுக்காரர் செய்யும் எல்லா விலைமனுக்களிலும் அவரின் கையொப்பமும் திகதியும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். எல்லா விலைமனுக்களும் சாட்சியாளர் இருவரினால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். நிபந்தனைகளுக்கு உட்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.*

*7. வெற்றிபெற்ற விலைமனுக்காரர் விலைமனுவை வாங்கியதாகக் கருதப்பட்டு பின் கள்ளுத்தவறணை ஏற்கப்படும் பத்திரத்தில் கையொப்பமிட்டு இம்புல்பே பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தைப் பிணைப்பணமாக செலுத்த வேண்டும்.*

*8. 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.30 மணிவரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் காலம் முடிவடைந்தவுடன் விலைமனுப் பெட்டி திறக்கப்படும். எல்லா விலைமனுக்காரரும் இங்கு கூறப்பட்ட நேரத்தில் இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.*

*9. எந்தவொரு காரணமும் காட்டாது எந்தவொரு விலைமனுவையும் அல்லது விலை மனுக்களையும் சொந்த விருப்பின் பெயரில் நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.*

*10. குறிப்பிட்ட தினத்தில் இந்த கள்ளுத்தவறணை விற்கப்படாவிட்டால் அதன் மீள் விற்பனை 2022.10.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அன்றைய தினம் விலை மனு சமர்ப்பித்தலானது இந்த விலைமனு வர்த்தமானி அறிவித்தலின்படி குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய ஏற்றுக்கொள்ளப்படும்.*

*11. 2022 ஆம் ஆண்டிற்காக தற்போது கள்ளுத்தவறணையை நடாத்திக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் கூற முடியாது. விலைமனுகாரரால் குறிப்பிட்ட பிரதேசத்தில் கட்டிடம் ஒன்றை (இடம்) தேடிக்கொள்ளலாம். அந்தக் கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அலுவலகத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக் கொள்ள உத்தரவுப்பத்திர அதிகாரி உடன்பட மாட்டார் என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.*

*12. மேலதிக விபரங்களுக்கு இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு தொடர்பினை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.*

*டீ.பீ.ஜீ.ரேணுகா,*
*பிரதேச செயலாளர்,*
*இம்புல்பே.*

*பிரதேச செயலகம்,*
*இம்புல்பே,*
*2022.07.28.*

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைந்துள்ள பிரதேசம் | திறந்திருக்க வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் நேரமும், முடியும் திகதியும் |
|---|---|---|---|---|
| பின்னவலை கள்ளுத்தவறணை இல. 02 | கடவத்த கோரளை | பின்னவலை நகரம் | மு. ப. 11.00 மணியிலிருந்து பி. ப. 02.00 மணி வரை பி. ப. 05.00 மணியிலிருந்து பி. ப. 08.00 மணிவரை | 2022.09.13 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை |

08- 48

---

**2023 ஆம் ஆண்டுக்காக கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை**

**திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவு**

2023ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திவுலப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் கள்ளுத்தவறணைகளில் பதப்படுத்தப்பட்ட கள்ளை சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் பூரண அதிகாரத்தைக் கொள்வனவு செய்வதற்காக 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விற்பனை நிபந்தனைகளுக்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்கும் உட்பட்ட வகையில் 2022.09.28ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளுத் தவறணை குத்தகையைப் பெற்றுக்கொள்ள முன்வருவோர் உரிய கேள்விப்பத்திரப் படிவமொன்றை முறையாக நிரப்பி கீழே காட்டப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விலைமனுப் பணத்தைக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ளப்படும் பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டொன்றையும், பிரகடனப்படுத்தப்பட்ட குத்தகை நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட சொத்துச் சான்றிதழொன்றையும் உள்ளடக்கியதாக இலச்சினை பொறிக்கப்பட்ட கடித உறையொன்றில் இட்டு அதன் இடப்புற மேல் மூலையில் தம்மால் விலைமனுச் செய்யப்படுகின்ற தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி ஒவ்வொரு தவறணைக்குமென இங்கே காட்டப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதி நேரத்திற்கு முன்னர் பதிவுத்தபாலின் மூலம் அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலம் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்குக் கிடைக்கச்செய்ய முடியும்.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர் கேள்விப்பத்திரத்தை நிரப்புகையில் கேள்விப்பத்திரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு திருத்தத்தையும் தமது கையொப்பத்தின் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்கள் கையேற்கப்படும் இறுதித் தினமான 2022.09.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விப்பத்திரதாரர்களும் பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

5. எவ்வித தகவல்களையும் உள்ளடக்காத கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையுமோ நிராகரிக்கும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச செயலாளருக்கு உண்டு.

6. மேற்குறித்த தினத்தில் விற்பனை செய்ய முடியாமல் போகின்ற கள்ளுத் தவறணையின் மீள் விற்பனை 2022.10.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மேற்கொள்ளப்படும். அத்தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தலும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அமைந்திருத்தல் வேண்டும்.

7. இச் சலுகையைக் கொள்வனவு செய்பவர் தொடர்பாக பிரகடனம் செய்யப்பட்டதன் பின்னர், அவ்வாறு பிரகடனம் செய்யப்பட்ட தினத்தன்று அதாவது குத்தகை விற்பனைத் தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்னர் திவுலப்பிட்டிய பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிதியில் இரண்டு மாதங்களுக்கான குத்தகைப் பணத்தினைவிட அதிகமான ஒரு தொகையை பிணையாகச் செலுத்தி தவறணை தொடர்பான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கின்றபோது அறிந்துகொள்ள வேண்டிய வேறு விபரங்களிருப்பின், அவற்றை திவுலப்பிட்டிய பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

டபிள்யூ. டபிள்யூ. எம்.டீ. குமாரி,
பிரதேச செயலாளர்,
திவுலப்பிட்டிய.

பிரதேச செயலகம்,
திவுலப்பிட்டிய,
2022, யூலை 20.

**அட்டவணை**

| இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | கிராமம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 27 - தாகொன்ன | திவுலப்பிட்டிய | தாகொன்ன | முற்பகல் 11.00<br>பிற்பகல் 5.00 | பிற்பகல் 2.00<br>பிற்பகல் 8.00 | 4,000 | 2022.09.28<br>முற்பகல் 10.30 |

8-26

---

## உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் 2023 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை மீண்டும் விற்பனை செய்தல்

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2023 ஆம் ஆண்டில் கள்ளுத் தவறணைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை கொள்வனவு செய்வதற்காக உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2022.08.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்துக் கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். என்பதுடன்-

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்தில் மாத்திரம் அன்றி எழுத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள் –

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு, கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கம் மற்றும் பெயர்", என்பவற்றைக் குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். அல்லது கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக்கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத தவறணைகளின் குத்தகைகள் 2022.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்கள் முன் வைப்பதற்கான தேவைப்பாடுகள் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாயிருத்தல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ. ரீ.என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2022.06.27 .

**அட்டவணை**

*2023 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்*

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. வஹுுக்கப்பிட்டிய கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த வஹுுக்கப்பிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2022.08.22ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 1,500.00 |
| 2. புஸ்ஸெல்லாவ கள்ளுத்தவறணை | உடபலாத்த | உடபலாத்த புஸ்ஸெல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2022.08.22ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 3,000.00 |

*8-24/1*

---

**ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2023**

*(2023, சனவரி 01 ஆந் திகதி முதல் 2023, திசெம்பர் 31 ஆந் திகதி வரை)*

*2023, சனவரி 01 ஆந் திகதி முதல் 2023, திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களிலும் இருக்கும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.*

*2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும், விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படுதல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையிலிட்டு இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "..................... இலக்க ......... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2022.09.22 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ஜா-எல பிரதேச செயலாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் ஜா-எல பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்கள் பெட்டியினுள் இடல் வேண்டும்.*

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதி கொண்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2022.09.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயம் கேள்விப்பத்திரக்காரர்கள் ஜா-எல பிரதேச செயலகத்துக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

6. குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்ய முடியாத தவறணைகளுக்கு 2022.10.25 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை நடைபெறும். அப்போது ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களும் வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

7. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை ஜா-எல பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ.ஏ.ஏ.எஸ்.வீரசேகர,
பிரதேச செயலாளர்,
ஜா-எல.

பிரதேச செயலகம்,
ஜா-எல,
2022.07. 26.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ( ரூபா) |
|---|---|---|---|---|
| 1. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கந்தான | 2022.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 1,500.00 |
| 2. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | வெலிகம்பிட்டிய | 2022.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 1,500.00 |
| 3. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | கணுவன | 2022.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 4,000.00 |
| 4. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | மடமவத்த ஏக்கல | 2022.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 5,000.00 |
| 5. | ஜா-எல பிரதேச செயலாளர் பிரிவு | தடுகம | 2022.09.22 மு.ப. 10.30 மணிக்கு | 1,000.00 |

8-27

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## டி எப் அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் (கடன்கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்) கம்பனியின் பதிவு இல. பீவீ 15328

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

இல.5/4, ஜனதா கோர்ட், இல. 27, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 3 இல் அமைந்துள்ள டி எப் அசோசியேட் (பிரைவேட்) லிமிட்டட் எனும் கம்பனியின் கடன்கொடுத்தோரின் 2022, ஆடி 15 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக மேற்படி கம்பனியின் கலைப்பாளராக இல. 11, காசல் ஒழுங்கை, கொழும்பு 4, 03 ஆம் மாடியில் ஜெறாட் ஜீவானந்தன் டேவிட் ஆகிய நான் நியமிக்கப்பட்டுள்ளேன் என சகலருக்கும் அறியத்தருகிறோம்.

ஜெறாட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்,
டி எப் அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்.

லெவல் 3,
இல. 11, காசல் லேன்,
கொழும்பு 4,
2022, யூலை 22.

08- 10/1

---

## டி எப் அசோசியேட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. பீவீ 15328

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 333 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

2022 ஆம் ஆண்டு ஆடி மாதம் 15 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட கம்பனி ஒடுக்குதல் பற்றிய விசேட தீர்மானம்

மேற்படி கம்பனியானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 333 ஆம் பிரிவிற்கு அமைவாக, கடன்கொடுத்தோரின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் கலைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆர்.ஜே. சேனானாயக்க,
எம்.எல்.ஆர்.விஜயபால,
பணிப்பாளர்கள்,

08- 10/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி 2020, திசெம்பர் 05 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: ரோச கட்டு உனகூருவ (பிரைவட்) லிமிட்டட்
பதிவு இலக்கம்: பீவீ 00247496
பதிவு முகவரி : இல. 53/ 3B, கிரிகரீஸ் வீதி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 7

சபையின் சார்பாக,

கிரிகரிஸ் பார்ட்னர்ஸ்,
கம்பனிச் செயலாளர்.

இல. 53/ 3,
கிரிகரீஸ் வீதி,
கொழும்பு 7.

8- 42

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, ஹெய்யன்துடுவ, புவக்லந்த, 751/5 என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரும் (696051151V) என்ற முன்னைய தே.அ.அ.இலக்கத்தையும் 196960501151 என்ற தற்போதைய தே.அ.அ.இலக்கமுடையவருமாகியவர்) தற்போது Rome 00188, VIA Glovanni Simonet 31 என்ற முகவரியில் வசிப்பவருமாகிய சிறிமா ராஜினி கருணாரத்ன ஆகிய நான், 4254 என்ற இலக்கத்தையும் 2016,ஏப்பிறல் 27 ஆந் திகதியுடையதும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு கமராலலாகே பிரசந்த நில்மினி பெரேரா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் கம்பஹா காணிப் பதிவகத்தில் 57 ஆம் பாகத்தின் 88 ஆம் பக்கத்தின் 28497 என்ற இலக்கமுடைய நாட்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டதும் இலங்கை, கோணவல, பமுனுவில, 125/5 என்ற இலக்கத்தில் வசிப்பவருமாகிய (தே.அ.அ.இல. 668001360V) கருணாரத்ன முதலிகே சியாமா லக்ஷ்மி கருணாரத்ன என்பவரை எனது உண்மையான மற்றும் சட்டரீதியிலான அற்றோணித்தத்துவக்காரராக நியமித்ததுடன் மேற்குறிப்பிட்ட அற்றோணித்தத்துவமானது சட்டரீதியான செயல்வலுவையும் மற்றும்/ அல்லது சட்ட வலுவையும் கொள்ளாமலிருப்பதுடன் மேற்குறிப்பிட்டுள்ள அற்றோணித் தத்துவத்தின் மூலம் எனது பெயரில் அல்லது எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் செயற்பாட்டிற்கும் அல்லது

கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிப்பதுடன் இத்தால் சமுகமளித்திருக்கும் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சிறிமா ராஜினி கருணாரத்ன .

08- 25

---

## விஷேட அற்றோணித்தத்துவப் பத்திரம் மீளப்பெறல் தொடர்பான அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், உக்குவெல, கலல்பிடிய பழைய கொலணி, இல. 1 இல் வசிக்கும் மரிக்கார் தம்பி சித்தி ஜரினா (தே.அ.அ.இல. 625751055 V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து பிரஜைகளுக்கும் இத்தால் அறிவிப்பது யாதெனில், பிரசித்த நொத்தாரிசு அசங்க திலகரத்னவினால் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி முடிக்கப்பட்ட இலக்கம் 4766- 2017.11.27 விஷேட அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் என்னால், உக்குவெல, கலல்பிடிய, பழைய கொலணி, இல. 1 இல் வசிக்கும் மொஹமட் காசிம் சித்தி பாத்திமா (தே.அ.அ.இல. 878060261V) என்பவருக்கு வழங்கிய மேற்படி விஷேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி தொடக்கம் செல்லுபடியற்றதென்றும் அந்நாள் மேற்கூறிய தத்துவப்பத்திரத்தை மீளப்பெறுவதாகவும் அறிவிக்கின்றேன்.

மேலும், 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி முதல் மேற்படி தத்துவப்பத்திரம் மூலமாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் என்றும் அறிவித்தல் விடுக்கின்றேன்.

மரிக்கார் தம்பி சித்தி ஜரினா .

இல.1, கலல்பிடிய பழைய கொலணி,
உக்குவெல.

08- 38

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை, மெலதும்பொத்த வீதி, இல. 3 இல் வசிக்கும் அஸ்வர்டீன் சித்தி இஷாடா (தே.அ.அ.இல. 685542153V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அனைத்து பிரஜைகளுக்கும் இத்தால் அறிவிப்பது யாதெனில், பிரசித்த நொத்தாரிசு ராஜசேகரன் மணிவன்னன் என்பவரால் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி முடிக்கப்பட்ட இலக்கம் 7814- 2016.01.08 விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் என்னால், மாத்தளை, மெலதும்பொத்த வீதி, இல. 3 இல் வசிக்கும் மொஹைடீன் சித்தி உசைரா (கடவுச்சீட்டு இல. 3895391) என்பவருக்கு வழங்கிய மேற்படி விசேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி தொடக்கம் செல்லுபடியற்றதென்றும், அந்நாள் மேற்கூறிய தத்துவப்பத்திரத்தை மீளப்பெறுவதாகவும் அறிவிக்கின்றேன். மேலும் இரண்டாயிரத்து இருபத்தி இரண்டாம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி முதல் மேற்படி தத்துவப்பத்திரம் மூலமாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்றும் அறிவித்தால் விடுக்கின்றேன்.

அஸ்வர்டீன் சித்தி இஷாடா .
இல.03, மெலதும்பொத்த வீதி,
மாத்தளை.

08-39

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 50/1E, நகனகிற மாவத்தை, கிரில்லவல, கடவத என்னும் முகவரியில் வசிக்கும் போபிடி கண்காணமலாகே லலிதா பத்மினி (658040855V) எனும் நான், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் பொது மக்களுக்கு தெரியப்படுத்திடுவதாவது,

241/3, சர்வோதய மாவத்தை, மெத்தகம, கிரிந்திவெல எனும் முகவரியையுடைய கொஸ்கொட ஆராச்சிகே பத்மினி திலகரத்ன (196474700386) எனும் நபரை எனக்காக நியமிப்பதற்காக, 7/9/2021 இல் பிரசித்த நொத்தாரிசு பவித்ரா திஸாநாயகவினால் உறுதிசெய்யப்பட்டு, அமுல்படுத்திய விசேட அற்றோணித் தத்துவப் பத்திர இலக்கம் 175 எனும் பத்திரத்தை இரத்துச் செய்கின்றேன்.

ஆகவே, இந்த அற்றோணித் தத்துவதாரரினால் அதாவது மேற்கூறப்பட்ட அற்றோணி பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து காரியங்களும் செல்லுபடியாகாது. மேலும் மேற்கூறப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

போபிடி கண்காணமலாகே லலிதா
பத்மினி.

08- 40

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இல.85, 15 ஆம் ஒழுங்கை, திக்ஹேன புர, மூனகம, ஹொரான என்னும் இடத்தில் வசிக்கும் யஷஸ் சேலக சமரசிங்க (தே.அ.அ.இல. 942830785V) ஆகிய நான், அற்றோணி உரிமைக்காரனாகிய என்னால், ஹொரண மூனகம, திக்கேபுர, இரண்டாம் பகுதியில் 15 ஆம் ஒழுங்கையில் வசிக்கும் டில்ஷான் சமிந்த சமரசிங்க என்பவருக்கு பிரபல நொத்தாரிசு சீதா ரோகினி அல்பேட்டினால் எழுதப்பட்டு வழங்கப்பட்ட இல. 1929 ஆம் 2018.06.25 ஆந் திகதியிடப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டதுமான பொது அற்றோணித் தத்துவமானது இன்றைய திகதியிலிருந்து இரத்துச் செய்யப்படுகிறது என்பதை இலங்கை வாழ் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

யஷஸ் சேலக சமரசிங்க.

08-41

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.320/D/2, சேர்கிள் வீதி, டிவ்லபிரிய, கம்பஹா மாவட்டம், மேல் மாகாணம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினை நிரந்தர முகவரியாகக் கொண்ட அதிகாரி அப்புகாமிலகே கயான் இந்துனில் (தேசிய அடையாள அட்டை இலக்கம் 197509800546) ஆகிய நான், இல. 80/B, வாவ வீதி, மாபோடால, கம்பஹா மாவட்டம், மேல் மாகாணம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினை நிரந்தர முகவரியாகவும் ஸ்ராடா ருடோர் கோசியு 24டி புச்சாறெஸ்ட், உரோமானியாவில் தற்போது வசிப்பவருமான ஏக்கநாயக்க அத்துக்கோறளகே நிசால் பிரியசட் இரங்க ஏக்கநாயக்க (தேசிய அடையாள அட்டை இலக்கம் 862763106V மற்றும் கடவுச்சீட்டு இலக்கம் N 8998271) என்பவரால் கம்பஹாவினைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஹெட்டி ஆரச்சிகே நிலுக்கா சுஜீவனி அவர்களால் 2021, நவெம்பர் 15 ஆம் திகதியிட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் ஊடாக எனக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தினை மீளப் பெற்று இரத்துச் செய்கின்றேன்.

ஆகவே, இந்த தத்துவப்பத்திரத்தின் மூலம் மேற்கூறிய ஏக்கநாயக்க அத்துக்கோறளகே நிசால் பிரியசட் இரங்க ஏக்கநாயக்க இனால் மேற்கொள்ளும் எந்தவித பரிமாற்ற காரியங்களிற்கு 2022, யூலை 11 ஆந் திகதியன்றிலிருந்து இவ் அற்றோணிப்பத்திரமானது எவ்விதமான வலிதுடமையினையும் கொண்டிருக்காமையினால் நான் பொறுப்பு ஏற்க மாட்டேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிகாரி அப்புகாமிலகே கயான் இந்துனில் .

08-43

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

உடுபத்தாவ, புன்னெகபொல, கென்தயாயவத்த, இல. 146/70 என்ற முகவரியில் வசிக்கும் பாலசூரிய முதியன்சேலாகே பவீதா ரூபலேகா பாலசூரிய (தேசிய அடையாள அட்டை இல. 728031425V) ஆகிய நான், எனது அற்றோணி தத்துவப்பத்திரக்காரராக உடுபத்தாவ, புன்னெகபொல, கென்தயாயவத்த, இல. 146/70 என்ற முகவரியில் வசிக்கும் வர்ணகுலசூரிய மகலேகம்கேதம்மிக பெர்னான்டோ தேசிய அடையாள அட்டை இல. 713070190V) ஆகிய நபரை நியமத்து பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. எஸ். ரொஷான் நிலந்த பெர்னான்டோ அவர்களால் எழுதி அத்தாட்சி செய்யப்பட்ட பதிவாளர் நாயகம் திணைக்களத்தின், வடமேல் , வடமத்திய கோட்டக்காரியாலத்தில் அற்றோணித் தத்துவப் பத்திர புத்தகத்தில் 79 ஆம் பிரிவில் 5849 ஆம் பக்கத்தில் 3248 ஆம் தின ஏட்டு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கம் 7475 ஆம் 2014.10.27 ஆந் திகதியுமான அற்றோணி தத்துவப்பத்திரம் இத்தால் மூலம் இரத்துச் செய்து வலுவிழக்கச் செய்வதாகவும் இதன் பின் மேலே கூறப்பட்ட வர்ணகுலசூரிய மகலேகம்கே சம்மிக பெர்னான்டோ ஆகியவரால் மேலே கூறப்பட்ட விஷேட அற்றோணிப் பத்திரத்தின் கீழ் என் பெயரால் அல்லது எனக்காக செய்யப்படும் ஏதாவது கொடுக்கல் வாங்கல்களுக்கு அல்லது செயல்களுக்கு நான் கடமைப்படவில்லை என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பாலசூரிய முதியன்சேலாகே பவீதா
ரூபலேகா பாலசூரிய.

குருநாகல்,
2022.07.18.

08- 14

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.118, புதிய எல்பிடிய, கெலிஓய இலங்கையில் வசிக்கும் மற்றும் இல. 8, பெய்ரன் வீதி, ஏலே, ரிஷன் இங்கிலாந்து, லண்டன், ஆர் ஜீ 6 ஐ ஈ பி, இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் முஹம்மது சரீபுதீன் முஹம்மட் ஹலீம் ஆகிய நான், இல. 118, புதிய எல்பிடிய, கெலிஒய இல் வசிக்கும் முஹம்மது சரீபுதீன் முஹம்மத் சித்தீக் (தே.அ.அ.இல. 611254350V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட இலங்கையின் ஐக்கிய இராச்சியத்திற்கான தூதுவராலயத்தின் உயர்ஸ்தானிகர் மூலம் 2010.06.07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட நாட்பதிவேட்டு விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் 2020.07.18 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

முஹம்மது சரீபுதீன் முஹம்மத் சித்தீக்

08- 32

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் மடபாத்த, தம்பே றோட், லேக் வூட் ட்ரைவ், இலக்கம் 116/IB என்ற முகவரியில் வசித்தவரும் தற்போது ஐக்கிய அமெரிக்காவில் ஸீ ஏ 90808, லோங்பீச், கிரேவூட் அவனியு, 4633 என்ற முகவரியில் வசிக்கின்ற 194808010020 எனும் இலங்கை தேசிய அடையாள அட்டையையும் N 7321921 எனும் இலக்கத்தையுடைய இலங்கை கடவுச்சீட்டையும் கொண்டவருமான றன்ஜீவ் பிரியன்த குணதிலக ஆகிய என்னால் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை கன்ஸியுளர் நாயகம் எச். எம். பி. ஹேரத் அவர்களினால் 2021.01.13 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட கோட்டே, அதுல்கோட்டே, புதிய ஜயவீர மாவத்தை, இலக்கம் 57 1/1 என்ற முகவரியில் வசிப்பவரும் 660481745V எனும் இலங்கை தேசிய அடையாள அட்டையை உடையவருமான குருகுலசூரிய அன்தனீ ரோமேஷ் பிரனான்து என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த விஷேட வெளிநாட்டு அற்றோணித் தத்துவத்தை செல்லுபடியற்றதாக்கி இரத்துச் செய்வதாக இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

